பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 04 புதன்கிழமை 18.01.2023 கதிர் 71



**இது ரகசியம் அல்ல!**

இரண்டு நாளைக்கு முன்னர் தான் கூட்டமைப்பில் இருந்து தமிழ் அரசுக் கட்சியை தனியே கழற்றி விட்டதனால் அது நிம்மதியாக தேர்தலை எதிர்கொள்ளப் போகிறது என்று இந்தப் பத்தியில்சொல்லியிருந்தேன். ஆனால் அரசியலில் அதெல்லாம் ☞2

### யாழ்ப்பாண தேசிய பொங்கல் விழாவிற்கு

# இந்தியத் துணைத் தூதரை அழைத்து அவமதித்த அரசு

### விரிவான அறிக்கை கொழும்புக்கு பறந்தது

(ந.லோகதாயளன்)

யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற தேசிய பொங்கல் விழாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்று கொழும்பு ஆட்சியாளர்களுக்கு பெரும் தலையிடியாக மாறியுள்ளது. இந்தியா - இலங்கை நாடுகளுக்கு இடையிலான உறவு வலுப்படவேண்டிய அவசியத்தில் கொழும்பு உள்ள நிலையில் கரும்புள்ளியாக இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது. ☞2

## பல்கலைக்கழக மாணவி கழுத்தறுத்துக் கொலை!

### கொழும்பில் கொடூரம்; இளைஞர் ஒருவர் கைது

கொழும்பு பல்கலைக்கழகத்தின் மூன்றாம் வருட விஞ்ஞானபீட மாணவி ஒருவர் நேற்றுப் பட்டப்பகலில் கழுத்தறுத்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு - 7, குதிரைப் பந்தயத் திடலில் அவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஹோமாகம பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய யுவதியே கொடூரமாக வெட்டிப் படுகொலை ☞2

## தமிழர் தாயகப் பகுதியிலிருந்து படைகள் வெளியேறவேண்டும்

### பொங்கல் வன்முறை வலியுறுத்துவதாக கண்டன அறிக்கை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்ட யாழ்ப்பாண பொங்கல் விழாவின்போது எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் மீது பொலிஸார் நடத்திய வன்முறைத் தாக்குதலை வன்மையாகக் கண்டித்துள்ளனர் சமயத் தலைவர்களும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும். இந்தச்சம்பவம் இலங்கை ஆயுதப் படையினர் தமிழர் தாயகத்தில் இருந்து வெளியேறவேண்டும் என்ற கோரிக்கையை ☞2

## உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு அனுமதி

### அமைச்சரவை நேற்று வழங்கியது

தமிழர்களுக்கு எதிரான போர் தொடர்பான உண்மைகளைக் கண்டறியவும் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்குமான ஆணைக் குழுவை நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இறுதிப் போரின்போது இடம்பெற்ற மனித உரிமை ☞9

## தேர்தல் நடந்தால் மொட்டு வெல்லும்

### இப்படி நம்புகின்றார் மஹிந்த



எந்தத் தடைகளும் இன்றி உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடந்தால் அதில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவே வெற்றியடையும்.

இவ்வாறு அந்தக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

உள்ளூராட்சி ☞9

### நிர்வாக இடைஞ்சலால் வேலை கிடைக்காத

## பட்டதாரிகளுக்கு உடன் நியமனம்!

### சபையில் எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை



நிர்வாக இடைஞ்சலால் வேலை கிடைக்காத பட்டதாரி களுக்கு உடனடியாக வேலை வழங்குங்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

60 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கிய திட்டத்தில் இருந்து நிர்வாக இடைஞ்சல் காரணமாக 465 பட்டதாரிகள் வெளியேறியுள்ளனர்.

இது தொடர்பில் கடந்த காலங்களில் ☞2

### யாழ். மாநகர சபை முதல்வர் பதவிக்கான

## தமிழ் அரசுக் கட்சியின் தெரிவு யார் என்பது இன்று முடிவாகும்

(இ.கலையமுதன்)

யாழ். மாநகர சபையில் நாளை நடைபெறவுள்ள முதல்வர் தெரிவில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாக யாரை நிறுத்துவது என்பது இன்று முடிவு செய்யப்படவுள்ளது. இது தொடர்பாக நேற்றுசெவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கூட்டம் இணக்கமின்றி முடிவுக்கு வந்த நிலையில் – இன்று காலை 9 மணிக்கு ☞9

## கடன் மறுசீரமைப்பு பேச்சுக்கள் வெற்றி

### ஜனாதிபதி அறிவிப்பு



இலங்கை பெற்றுள்ள கடன்களைத் திருப்பிச் செலுத்துவதை மறுசீரமைப்பது தொடர்பில் இந்தியா மற்றும் சீனாவுடன் நடத்தப்பட்ட பேச்சுக்கள் ☞9

## இன்று முதல் வேட்புமனு தாக்கல்

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இதற்கான அவகாசம் எதிர்வரும் 21ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் நிறைவடையவுள்ளது.

இதேவேளை, ☞2

## லஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் இளம் கான்ஸ்டபிள் நேற்று கைது

### காணி மோசடி வழக்கில் விசாரணையாளராக இருந்தவர்

யாழ்ப்பாணத்தில் பெரும் தொகையை லஞ்சமாகப் பெற்றார் என்ற குற்றச்சாட்டின் கீழ் இளம் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் நேற்று மாலை கைதுசெய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் பொலிஸ் சிறப்புக் குற்றத் தடுப்புப் பிரிவில் கடமையாற்றி வருகிறார். அண்மையில் காணி மோசடி தொடர்பில் சட்டத்தரணி உள்ளிட்ட பலர் கைது செய்யப்பட்ட வழக்கில் இவரும் ஓர் விசாரணையாளராகக் கடமையாற்றியிருக்கிறார்.

காணி வழக்குடன் தொடர்புபட்ட ஒருவரிடம் ☞9

## வசந்த முதலிகேக்கு விளக்கமறியல் நீடிப்பு

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அமைப்பாளர் வசந்த முதலிகே மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். ஜனவரி மாதம் 31ஆம் திகதி வரை அவரை மறியலில் வைக்கும்படி கொழும்பு பிரதான நீதிவான் மன்றம் உத்தரவிட்டது.

வசந்த முதலிகே சார்பில் முன்னகர்த்தப்பட்ட பிணை மனு மீதான முடிவை எதிர்வரும் 31ஆம் திகதி வழங்குவார் என்று நீதிவான் பிரசன்ன அல்விஸ் ☞9

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடக்கிற காரியமில்லை என்பதுதான் உண்மையாக இருக்கிறது.

இப்போதுதமிழ் அரசுக்கட்சிக்குள்தான் வேட்பாளர் தெரிவு தொடர்பில் பல குளறுபடிகள் என்று செய்தி. கிளிநொச்சியில் ஒரு புறத்தில் கட்சி இடம்கொடுக்காத உறுப்பினர்களில் சிலர் சுயேச்சையாகக் களம் இறங்கப் போகிறார்கள் என்று தகவல். அதில் ஒரு சிலர் முக்கிய புள்ளிகளாம். கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சுமந்திரனுக்கு ஆதரவாக நடந்துகொண்டதால் கிளிநொச்சி 'ஜமீனை' பகைத்துக் கொண்டதுதான் தாங்கள் வெட்டிவிடப் பட்டதற்குக் காரணம் என்று கறுவும் அவர்கள், இந்தத் தடவை சுயேச்சையாக நின்று அவருக்கு பாடம் படிப்பிக்க வேண்டும் என பதில் பிடிவாதமாக இருக்கிறார்கள்.

மற்றப்பக்கத்தில் யாழ். மாநகர சபைக்கு யார் மேயர் வேட்பாளர் என்பதை உரிய மேலிடங்கள் முடிவு செய்துவிட்டாலும் சொந்தக் கட்சியாலேயே தோற்கடிக்கப்பட்ட மேயரான ஆர்னோல்ட் அடுத்த முறையும் அந்தப் பதவியைப் பிடிக்கும் தனது முயற்சியில் மனந்தளராத விக்கிரமாதித்தனாக முருங்கை மரம் ஏறிக் கொண்டே இருக்கிறார்.

பொறுப்பான மேலிடங்கள் யாழ். மாநகர மேயர் வேட்பாளராக ந.வித்தியாதரனை முடிவு செய்துவிட்டதாக உறுதிப்படுத்த முடிகின்றது. அதற்கு ஆர்னோல்ட்டின் சம்மதமும் பெறப்பட்டதாகவே கதை. ஆனாலும் கடைசிவரை கதவைப் பிடித்து ஆட்டுவேன் என்பதாக ஆர்னோல்ட்டின் முயற்சிகளும் தொடர்கின்றன.

நேற்று மார்ட்டின் ரோட் அலுவலகத்தில் ஒரு கூட்டம் நடந்தது. கட்சித் தலைவர் மாவையர் இந்தக் கூட்டத்திற்கு அழைத்துள்ளார் என்று ஆர்னோல்ட்தான் எல்லா உறுப்பினர்களுக்கும் திங்கட்கிழமை தகவல் தந்திருந்தார். நாளை 19ஆம் திகதி நடக்கப்போகும் யாழ். மாநகர சபைக்கான மேயர் தெரிவிற்கு கட்சி யாரை முன்னிறுத்துகின்றது என்று ஆராய்வதற்கான கூட்டம் அது. தான் ஏன் மீண்டும் மேயர் ஆகலாம் என்பதற்கான தன்னிலை விளக்கத்தை அவர் கொடுத்தார்.

தன் மீது இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் எவையும் இல்லை என்றும் தனது வரவு –செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டதே தான் பதவி இழக்கக் காரணம் என்றும் வாதிட்டார். அவரது வரவு – செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படுவதற்கான ஏது நிலை ஏன் ஏற்பட்டது என்பதை அவர் வசதியாக அங்கு மறந்துவிட்டார் அல்லது மறைத்து விட்டார். கட்சி உறுப்பினர்கள் அனைவரும் விரும்பியபடி வாக்களிக்கலாம் என்று விட்டிருந்தால் அவருக்கு கட்சியிலிருந்து ஒரு சிலரைத் தவிர யாரும் வாக்களித்திருக்கமாட்டார்கள் என்பதுதான் உண்மை நிலையாக இருந்தது. அதற்குக் காரணம் என்ன என்பது அவருக்கே நன்கு தெரியும்.

அப்படியிருந்தும் உண்மைகளை மறைத்து தன்னை மீண்டும் மேயராக முன்னிறுத்தும் அவரது முயற்சிக்கு அங்கிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தவிர வேறு யாரும் வெளிப்படையான ஆதரவு தந்தமாதிரி இல்லை. சிறிதரன் மட்டுமே ஆர்னோல்ட்டுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கலாம் என்றார். ஆனால் கட்சி அது தொடர்பில் எந்த முடிவும் எடுக்க வில்லை.

காரணம், தன்னைமேயர் ஆக்குவதாகத் தனக்கு வீடு தேடி வந்து கட்சித் தலைவர் மாவை கொடுத்த வாக்குறுதியை அங்கு நினைவுபடுத்திய சொலமன் சிறில், அந்த வாக்குறுதியை நிறைவேற்றாவிட்டால் தான் கட்சியைவிட்டே ஒதுங்கிக்கொள்கின்றேன் என்று ஒரே போடாகப் போட்டார். வயசான காலத்தில் அவரின் மனதை நோகடிக்க விரும்பாத கட்சி முடிவு எடுப்பதற்காக இன்று காலை மீண்டும் கூடுவது என்று தீர்மானித்திருக்கிறது.

இன்றைய தினம் அனேகமாக சிறில் தானாகவே மனமுவந்து விட்டுக்கொடுக்க, ஆர்னோல்ட் மேயர் வேட்பாளராவார் என்று தெரிகிறது. அதற்காக சொலமன் சிறிலை தாஜா செய்யும் வேலைகள் நேற்று மாலையில் இருந்து நடந்து வருகின்றன.

நேற்றைய கூட்டத்தில் அனைவரும் மெச்சிய ஒரே விடயம் கட்சித் தலைவர் மாவையரின் அணுகுமுறைதான். வழக்கம்போல நாவறண்டு போகுமளவிற்கு நீண்ட உரையை ஆற்றாமல் இரத்தினச் சுருக்கமாக முடித்துக்கொண்டதுதான் கூட்டத்தில் பலருக்கும் வியப்பாக இருந்தது. இப்ப கொஞ்சநாளாகவே ஆள் அப்படித்தான் என்று கிசுகிசுத்தார் கட்சிக்குள் தலைவரை நன்கு அறிந்த நபர் ஒருத்தர்.

ஆர்னோல்ட்டை எதிர்த்து மீண்டும் மணிவண்ணன் களம் இறங்கவே வாய்ப்புக்கள் பிரகாசமாக உள்ளன. ஆர்னோல்ட்தான் தமிழ் அரசின் தெரிவு என்றால், தான் பதவி விலகினால் மீண்டும் மேயர் தெரிவு நடக்காது என்று எண்ணிக்கொண்டது நடக்காமல் போய் மானங்கெட்டது கூடப் பறவாயில்லை என்று களத்தில் இறங்க அவர் தயார் என்கிறது விடயம் அறிந்த வட்டாரம்.

இதற்கிடையில் ஆசை யாரைத்தான் விட்டது. யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் தெரிவில் திடீர் திருப்பமாக வெறும் 3 ஆசனங்களை மட்டுமே வைத்துள்ள தேசியக் கட்சி ஒன்று தானும் மேயர் ரேஸில் ஓடுவேன் என்று அடம் பிடிக்கிறது. மேயர் பதவியைத் தங்களிடம் தருமாறும் கோரும் அந்தக் கட்சி, பொது வேட்பாளராக களம் இறங்க எண்ணுகின்றதாம்.

இதற்காக, 15ஆம் திகதி யாழ். வந்த ஜனாதிபதி மூலம் ஈ.பி.டி.பியின் ஆதரவும் கோரப்பட்டுள்ளது. தற்போது ஈ.பி.டி.பியிடம் 11 சீற் இருந்தாலும் பதவியைப் பிடிக்க அது போதாது. பதவியைப் பிடிக்க முடியா விட்டால் பிளான் 'பி'யும் போட்டு வைத்திருக்கிறது அந்தக் கட்சி. அதாவது வாக்கெடுப்பிற்கான 50 வீத கோரம் இல்லாத நிலையை உருவாக்குவதே அந்த பிளான் 'பி'யாம்.

இத்தனையையும் தாண்டி ஒரு முதல்வர் வருவாரா நாளைய தினம் பார்ப்போம்.

- இடிமின்னல் -

## இந்தியத் துணைத் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசின் பொங்கல் விழா யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள சிவன் கோயிலில் அரசு ஏற்பாட்டில் இடம்பெற்றது. இதில் கலந்து கொள்வதற்கு பலருக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியதுணைத்தூதரகத்திற்கும் அழைப்பு அனுப்பப்பட்டது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவே நேரில் சென்று இந்த அழைப்பை வழங்கியிருந்தார்.

அழைப்பை ஏற்றுக்கொண்டு பொங்கல் விழாவன்று நிகழ்விடத்திற்கு வருகை தந்தார் இந்திய துணைத் தூதுவர் ராஜேஸ் நட்ராஜ். ஆனால் அங்கு அவரை வரவேற்கவோ கணக்கெடுக்கவோ எவரும் இல்லை. குறைந்தபட்சம் அவருக்கு இருப்பதற்கான இருக்கைகூட ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

விழாவிற்கு அழைக்கப்பட்ட முக்கிய விருந்தினர்களில் முதன்மையானவர்களுக்கு மேடையில் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் அங்கு அமர்ந்திருந்தனர். அதேபோன்று முக்கிய அதிகாரிகள், விருந்தினர்கள் பலருக்கும் முதல் வரிசையில் இருக்கைகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

ஆனால், பிற்பகல் 2.30 மணிக்கு நிகழ்விடத்திற்குச் சென்ற இந்திய துணைத் தூதர் இருக்கக்கூட இடமில்லாமல் அவதிப்பட்டார். அதனைக் கண்டு அவரது மெய்க்காவலர்கள் ஒரு கதிரையை ஏற்பாடு செய்து கொடுக்க, ஏழாவது வரிசையில் ஒரு மூலையில் அமர்ந்திருந்துவிட்டு 5.30 மணியளவில் யாருக்கும் சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டுச் சென்றுவிட்டார்.

பொதுவாக தூதுவர்கள், துணைத் தூதுவர்கள் இராஜதந்திர மதிப்பைக் கொண்டவர்கள் என்பதால் அவர்களுக்கு அமைச்சர்களுக்கு நிகரான அல்லது அடுத்தபடியான மரியாதை மதிப்பு வழங்கப்படும். ஆனால், பொங்கல் விழாவில் இந்திய துணைத் தூதுவரை அழைத்து இப்படிக் கவனிக்காமல் விட்டது சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்த அவமரியாதை குறித்து யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம் விரிவான அறிக்கை ஒன்றை கொழும்பில் உள்ள தூதரகத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறது. இது தொடர்பில் கொழும்பு தூதரக வட்டாரங்கள் தமது கண்டனத்தை அரசிடம் தெரிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்திய அயல்துறை அமைச்சர் ஜெய்சங்கர் மாதக் கடைசியில் கொழும்பு வரவுள்ள நிலையில், இந்தச் சம்பவம் இராஜதந்திர உறவுகளில் விரும்பத்தகாத நிகழ்வாகப் பதிவாகியுள்ளது.

## பல்கலைக்கழக மாணவி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளார்.

இவரின் கழுத்தில் ஆழமான வெட்டுக் காயங்கள் காணப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இளைஞர் ஒருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

வெல்லம்பிட்டியைச் சேர்ந்த 24 வயதான பல்கலைக்கழக மாணவனே சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் மேலதிக விசாரணைக்காகக் கறுவாத்தோட்டப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

## பட்டதாரிகளுக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ச்சியாக நாடாளுமன்றத்துக்கும், சம்பந்தப்பட்ட விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கும் அறிவித்தபோதும் உரிய ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை.

இந்த 2023 ஆம் ஆண்டுக்குள்ளாவது தலையிட்டு இப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வை வழங்குமாறு கோரிக்கை விடுக்கின்றேன் – என்றார்.

## இன்று முதல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான கட்டுப்பணம் எதிர்வரும் 20ஆம் திகதி வரையில் செலுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழர் தாயகப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலுப்படுத்தியுள்ளது என்றும் தெரிவித்துள்ளனர்.

"தமிழர் தாயகப் பகுதியான யாழ்ப்பாணத்தில், தேசிய பொங்கல் எனும் பெயரில் சிறிலங்காவின் ஜனாதிபதி ரணில் அவர்களினால் தமிழர் திருநாளாம் பொங்கல் தினத்தில் சர்வதேசத்திற்கும், சிங்கள மக்களுக்கும் அரங்கேற்றப்பட்ட நாடகத்தை தோலுரித்துக்காட்டும் விதமாக யாழ். பல்கலைகழக மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட அமைதிவழி பேரணியில் கலந்து கொண்ட வயோதிபத் தாய்மார்கள், சிறுவர்கள், பெண்கள், மதத்தலைவர்கள் மற்றும் மாண வர்கள் மீது சிறிலங்கா பொலிஸாரினாலும், விசேட அதிரடி படையினராலும், இராணுவத்தினராலும் மேற்கொள்ளப்பட்ட வன்முறை மற்றும் நீர்த்தாரைப்பிரயோகத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம்" என்று அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழர் தாயகப் பகுதியில் தமிழ் மக்கள் ஆகிய நாம் சுதந்திரமாக நடமாட முடியாமலும், எமது அரசியல் நிலைப்பாட்டினை சுதந்திரமாக வெளிப்படுத்த முடியாமலும் தொடர்ச்சியான அடக்குமுறைக்குள்ளேயே கடந்த பதின்மூன்று வருடங்களாக வாழ்ந்து வருகின்றோம்.

எமது உறவுகளைக் கொன்று குவித்த, காணாமல் ஆக்கிய, எமது நிலங்களை ஆக்கிரமித்து நிற்கும் சிறிலங்காவின் ஆயுத படையினரும், புலனாய்வாளர்களும் தொடர்ச்சியாக எமது மக்களை

(09ஆம் பக்கம் பார்க்க)






காலைக்கதிர்
Kalaikkathir

# தமிழ் தேசியக் கூட்டமைப்பை ஒரு போதும் பிரிக்கமுடியாது!

## இரா.சாணக்கியன் திட்டவட்டக் கருத்து



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து நாங்கள் பிரியவில்லை எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவராக இன்றும் சம்பந்தன் ஐயா தான் இருக்கிறார் எனவும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

அவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பு பிரிந்து விட்டது என்று சொன்னால் சம்பந்தன் ஐயாவை தலைவராக ஏற்றுக் கொள்ளவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் , சித்தார்த்தன் ஆகியோர் அறிவிக்கட்டும் எனவும் குறிப்பிட்டார்.

மட்டு.ஊடக அமையத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

அவர்களுக்குள்ளே ஐந்து கட்சிகள், ஆறு கட்சிகள் என இணைந்தார்கள் அதிலும் முதலாவது நாளிலே குழப்பங்கள் வந்திருந்தன என்பதை நாங்கள் அறியக் கூடியதாக இருந்தது. என்னுடைய நிலைப்பாடு நாங்கள் எங்களுடைய பங்காளி கட்சிகளை ஒருபோதும் விமர்சிக்கப் போவதில்லை. அவர்கள் விமர்சிக்கிறார்கள் என்றால் அது அவர்களுடைய விருப்பம்.

என்னுடைய நிலைப்பாடு, நாங்கள் இலங்கைத் தமிழரசு கட்சியுடையதும் பங்காளி கட்சிகளுடைய தொழில்நுட்ப ரீதியாக ஆராய்ந்ததன் அடிப்படையிலே அதிகூடிய ஆசனங்களை நமது பங்காளி கட்சியின் ஊடாகவும் நாங்களும் இணைந்து எடுத்து வடக்கு கிழக்கில் இருக்கும் அனைத்து பிரதேச சபைகளும் நாங்கள் ஆட்சி அமைக்கக் கூடிய சூழல் அமையும்.

எங்களுடைய பங்காளி கட்சிகளுக்கு இந்த இடத்திலேயே இந்தத் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என நான் வாழ்த்துகின்றேன்.

உள்ளூராட்சி தேர்தல் வேட்புமனு தாக்கல் செய்வதற்காக சகல ஆயத்தங்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாக நாங்கள் இறுதிக்கட்டத்துக்கு வந்திருக்கின்றோம்.

எங்களுக்கு பல வட்டாரங்களில் பாரிய சவால்கள் காத்துக் கொண்டிருக்கின்றன. ஒருவரை தான் நாங்கள் நிறுத்தலாம். ஆனால் 6, 7 என அதிகமான விண்ணப்பங்கள் காணக்கூடியதாக இருக்கின்றது.

இம்முறை பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் அனைத்து இடங்களிலுமே நாங்கள் சமனான பங்குகளைச் செய்வதற்கு முயற்சி எடுத்து இருக்கின்றோம். – எனத் தெரிவித்தார்.

# வவுனியா பொதுவைத்தியசாலை வைத்தியர்களும் ஆர்ப்பாட்டம்!



வவுனியா பொது வைத்தியசாலையின் வைத்தியர்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர்.

அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட புதிய வரிக்கொள்கை மற்றும் வைத்தியசாலைகளில் நிலவும் மருந்து தட்டுப்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் தன்னிச்சையான அசாதாரணவரிதிருத்தத்தை உடனடியாக மீளப்பெறவும், மருந்து இல்லாதமை சுகாதார கட்டமைப்பும் சீர் குலைந்துள்ளது, சத்திர சிகிச்சைகளும் இல்லை மருந்துகளும் இல்லை என்ற பதாதைகளை தாங்கியிருந்தனர்.

# யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக கவனவீர்ப்பு போராட்டம்!



அரசாங்கத்தின் தன்னிச்சையான அசாதாரண வரித் திருத்தத்தை உடனடியாக நிறுத்தவலியுறுத்தியும் மருந்து தட்டுப்பாட்டுக்கு தீர்வு கோரியும் யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்பொன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக நேற்று (செவ்வாய்க்கிழமை) நண்பகல் கூடியவர்களே போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர், பல் மருத்துவத்துறை சார்ந்தவர்கள், சட்ட மருத்துவ அதிகாரிகள், வங்கிகளின் தொழிற்சங்க அதிகாரிகள், யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்க பிரதிநிதிகள், இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் சங்க உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.அரசாங்கம் இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வை தர முன் வர வேண்டுமென போராட்டக்காரர்கள் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தனர்.

# பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மன்னாரில் கவனவீர்ப்புப் போராட்டம்!



மன்னாரில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேசக்கரம் பிரஜைகள் குழு மற்றும் மன்னார் மாவட்ட மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் இணைந்து ஏற்பாடு செய்த இந்தக் கவனவீர்ப்பு போராட்டத்தில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

வட மாகாணத்தில் மக்களைப் பாதிக்கும் வள சுரண்டல்கள், காணி அபகரிப்புக்கள், கடற்பரப்புக்களை தனியார் வசப்படுத்தல் போன்ற செயற்பாடுகளைக் கண்டித்தும், சமத்துவத்தையும் நிலைநிறுத்தக் கோரியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தை தொடர்ந்து மன்னார் மாவட்ட செயலகத்திற்கு சென்று தமது கோரிக்கை அடங்கிய மகஜர் மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# திருநெல்வேலி சந்தையில் திங்கள் கோமாதா பூஜை!




பட்டிப்பொங்கல் தினத்தை முன்னிட்டு திருநெல்வேலி தேனு களஞ்சியத்தின் ஏற்பாட்டில் திங்கட்கிழமை கோமாதா பூஜை இடம்பெற்றது.

திருநெல்வேலி சந்தையின் உட்புறமாக உள்ள தேனு களஞ்சியத்தின் முன்னாக விசேட பூஜைகள் படையல்கள் நடை பெற்று கோ மாதாக்களுக்கு உணவளிக்கப்பட்டது.

# வவுனியா மாநகரசபையில் ரெலோ ஆட்சி அமைக்கும்!

## வினோ அபரிமித நம்பிக்கை



உள்ளூராட்சி மன்ற தேர்தலின் பின்னர் வவுனியா மாநகரசபையில் தமிழீழ விடுதலை இயக்கமான ரெலோ மேயரை நியமித்து ஆட்சி அமைக்கும் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பது மற்றும் வட்டாரங்களில் வேட்பாளர்களை நியமிப்பது தொடர்பில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி பங்காளி கட்சிகளுக்கிடையில் வவுனியா நகர சபை மண்டபத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது வவுனியா மாநகரசபை மற்றும் 3 பிரதேச சபைகளில் ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி போட்டியிடுகின்றது.

இதன்போது வவுனியா மாநகரசபையில் இந்தக் கூட்டணி வெற்றிபெறும் பட்சத்தில் மாநகர மேயரை நியமித்து ஆட்சி அமைக்கும் பொறுப்பு தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோவும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையில் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியும் செட்டிகுளம் பிரதேச சபையில் புளொட்டும் வவுனியா வடக்கு பிரதேச சபையில் ஜனநாயகப் போராளிகள் கட்சியும் ஆட்சி அமைக்கும் பொறுப்பை இந்தக் கூட்டணி பகிர்ந்துள்ளது.

இந் நிலையில் உள்ளூராட்சி மன்றங்களில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி சார்பில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் தொடர்பிலும் பங்காளி கட்சிகளுக்கிடையில் இணக்கப்பாடு எட்டியுள்ளதாகவும் வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு எப்படி இருக்கவேண்டும்?

இறுதிப் போர் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கான உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை உருவாக்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்று அரசு அறிவித்துள்ளது. போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் (பொதுவாக இவை போர்க் குற்றங்கள் என்று அழைக்கப்படுகின்றன) தொடர்பில் விசாரணை நடத்தப்படவேண்டும் என்கிற பன்னாட்டு அழுத்தத்திற்கான பதிலாக இந்த ஆணைக்குழு அமைக்கப்படுகின்றது.

போரில் இழைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பில் இலங்கை அரசு உள்நாட்டு விசாரணைகளை நடத்துவதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டும் அது பயன்படுத்தப்படாத நிலையில், சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் ஏற்கனவே பரிந்துரைத்துள்ளார். இலங்கை அரசின் எந்தவொரு உள்நாட்டு விசாரணையும் நீதி, நேர்மை, நியாத்துடன் இருக்காது என்பதால் தமக்குப் பன்னாட்டு விசாரணை ஒன்றே தேவை என்று கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக வலியுறுத்தி வருகின்றனர்.

இவற்றுக்கான பதிலாகத்தான் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அரசு அமைக்கப் பார்க்கின்றது. தென்னாபிரிக்காவில் உள்நாட்டுப் போருக்குப் பின்னர் இதுபோன்ற ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. அது வெற்றிகரமானதாக அமைந்ததால் அதன் மாதிரியைக் கொண்டு இலங்கையிலும் அத்தகைய ஒன்றை அமைக்கலாம் என்று அரச தரப்புக் கருதுகின்றது.

ஆனால், இந்த விடயத்தில் தென்னாபிரிக்காவிற்கும் இலங்கைக்குமான அடிப்படை வித்தியாசம் ஒன்றுள்ளது. அங்கு பாதிக்கப்பட்ட தரப்பு போரில் வெற்றி பெற்ற பின்னர் இந்த ஆணைக்குழுவை அமைத்தது. அதன் மூலம் ஒடுக்கிய தரப்பு நிகழ்த்திய குற்றங்களை வரிசைப்படுத்திய அதே நேரத்தில் அவர்களுக்கு மன்னிப்பும் வழங்கியது. இலங்கையில் இது தலைகீழாகவே இருக்கின்றது. இங்கு பாதிக்கப்பட்ட தரப்பு அல்லாமல் ஒடுக்கிய தரப்பே வெற்றியாளராகவும் இருக்கின்றது. இப்போது அந்தத் தரப்பே ஆணைக்குழுவையும் அமைக்கப்போகின்றது.

இலங்கை அரசுக்கு இருக்கின்ற ஏமாற்றுப் புத்தி வரலாறு முழுவதும் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில், வெற்றிபெற்ற தரப்பான அரசே ஆணைக்குழுவை அமைத்து விசாரணைகளை முன்னெடுப்பதும் அது ஒரு உள்ளகப் பொறிமுறை என்பதும் நம்பகத்தன்மையை பெறக்கூடியவை அல்ல. எனவே அத்தகைய பொறிமுறை அமைக்கப்படுமானால் அதில் சிறுபான்மையினர் பெரும்பான்மையாக இருக்கின்ற நிலையும் பன்னாட்டு நீதிபதிகள் , சட்ட வல்லுநர்கள், குற்றஞ்சாட்டுநர்கள் ஆகியோரை உள்ளடக்கியும் இருக்க வேண்டியது அவசியம்.

அப்படியில்லாத ஒரு கட்டமைப்பை தமிழர்கள், குற்றவாளிகளை மன்னித்து விடுவிப்பதற்கான சதி நாடகமாகவே பார்ப்பார்கள் என்பது நிச்சயம்.

## யாழ். மாவட்ட அரச அதிபர் இன்று பதவியேற்கின்றார்



யாழ்ப்பாணம், ஜன.18

யாழ்ப்பாணம் மாவட்ட புதிய அரசாங்க அதிபராக அம்பலவாணர் சிவபாலசுந்தரனுக்கான நியமனக் கடிதம் நேற்று பிரதமர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்த இன்று 18ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் காலை 9.30 தொடக்கம் 10.30 வரையான சுபவேளையில் தனது கடமைகளை அவர் பொறுப்பேற்கிறார்.

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய க.மகேசன், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளராக பதவியுயர்வு பெற்றுச் சென்றதனைத் புதிய அரசாங்க அதிபராக அம்பலவாணர் சிவபாலசுந்தரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் அரசாங்க அதிபராக கடமையேற்க முன்னர் வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளராக கடமையாற்றியிருந்தார்.

இவர் வவுனியா மாவட்ட செட்டிகுளம் பிரதேச செயலாளராக 2005 முதல் 2008 டிசம்பர் வரை பணியாற்றி பின்பு 2009 முதல் 2013 யூன் மாதம் வரை வவுனியா பிரதேச செயலாளராகவும் பணியாற்றினார்.

## வசந்த முதலிகேவை உடன் விடுவிக்கக் கோரி ஏழு மனித உரிமை அமைப்புகள் கூட்டறிக்கை



கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகேவை இலங்கை அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும் எனக் கோரி ஏழு மனித உரிமை அமைப்புகள் இணைந்து கூட்டறிக்கை மூலம் வலியுறுத்தியுள்ளன.

சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஆசிய ஒன்றியம், மனித உரிமைகள் கண்காணிப்பகம், சோசலிச பாதுகாப்பு அமைப்பு, இலங்கை தொடர்பான சர்வதேச செயற்பாட்டுக்குழு, சமாதானம் மற்றும் நீதிக்கான இலங்கை குழு ஆகியன கூட்டாக இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளன.

வசந்த முதலிகே கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 21ஆம் திகதி தொடக்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக அரசு இரத்துச் செய்வதாக உறுதியளித்த இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் ஒரு கொடூரமான சட்டம் என்று கூட்டறிக்கையில் அவ்வமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

எனினும், இதுவரை அரசு குறித்த சட்டத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், ஊழல்மிக்க ஆட்சி முறைக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட மக்கள் போராட்டத்துக்குப் பொலிஸார் மற்றும் இராணுவத்தினருக்கு அதிக அதிகாரங்களை வழங்கியதன் மூலமே அரசு பதிலளித்தது என்றும் அவ்வமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில், தொடர்ந்தும் வசந்த முதலிகேவைத் தடுத்து வைக்க எந்தக் காரணமும் இல்லை என்றும் குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இந்திய வெளிவிவகார அமைச்சரின் விஜயம் நாட்டுக்கு உதவுவதை நோக்காககொண்டது

### அரசாங்க வட்டாரங்கள் நம்பிக்கை




இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கரின் இலங்கை விஜயம் பொருளாதார நெருக்கடியில் இலங்கைக்கு உதவுவதை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கும் என அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எரிசக்தி, பாதுகாப்பு, உணவுப் பாதுகாப்பு, நாணய பரிவர்த்தனை மற்றும் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு போன்றவை தொடர்பாகவும் பேச்சுகள் இடம்பெறுகின்றன என அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இரண்டுநாள் விஜயத்தின் போது சில அறிவிப்புகள் வெளியாகலாம் எனவும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த வருடம் இந்தியா வழங்கிய ஆதரவுகளின் அடிப்படையில இலங்கையின் வேண்டுகோளுக்கு இந்தியா சாதகமான பதில்களை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது என அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் இரண்டு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் தொடர்பாகப் பேச்சுகள் இடம் பெறலாம் என்ற எதிர்பார்ப்பு காணப்படுகின்றது. திருகோணமலை அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகலாம் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியில் உதவுவது இந்தியாவின் முக்கிய கரிசனைக்குரிய விடயமாகக் காணப்படுகின்றமையால் புதிய அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர் ஜெய்சங்கர் மேற்கொள்கின்ற இந்த விஜயத்தின் போது இரு தரப்பு உறவுகள் தொடர்பாகவும் முழுமையான மீள் ஆய்வு இடம்பெறலாம் எனவும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# தேர்தலை நிறுத்த எவருக்குமே சந்தர்ப்பம் வழங்காது மக்கள் சக்தி

## அதன் தலைவர் சஜித் தெரிவிப்பு



உள்ளூராட்சி சபைத் தேர்தலை நிறுத்த எவருக்கும் எந்த சந்தர்ப்பமும் வழங்கப்பட மாட்டாது என ஐக்கிய மக்கள் சக்தித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஹொரவப்பத்தான தேர்தல் தொகுதிக் கூட்டம் எதிர்க்கட்சித் தலைவர் தலைமையில் திங்கட்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசு தேர்தலுக்கு அஞ்சுவதாகவும், இந்த அரசிடம் சம்பளம் வழங்கவும், தேர்தல் நடத்தவும் பணம் இல்லாவிட்டாலும், 2 ஆயிரம் இலட்சம் செலவு செய்து சுதந்திர தின கொண்டாட்டம்நடத்தபணம்இருப்பதாகவும்அவர்சுட்டிக்காட்டினார்.

தேர்தலை நிறுத்தவோ அல்லது ஐக்கிய மக்கள் சக்தியின் வெற்றியை தடுக்கவோ எவருக்கும் எந்த சந்தர்ப்பமும் வழங்கப்பட மாட்டாது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

நமது நாட்டில் விஜபி (VIP) சோசலிஸவாதிகள் என்ற ஒரு பிரிவினர் இருக்கின்றனர். அவர்கள் கிராமத்திற்கு வந்து தொழிலாளர் வர்க்கம், சோசலிசம் என பேசினாலும் அவர்களின் பிள்ளைகள் வெளிநாட்டில் சிறந்த கல்வியைப் பெறுகிறார்கள்.

விஜபி சோசலிஸவாதிகள் இருவரினது பாடசாலைக்கு நன்கொடையாக பஸ் வழங்கியதால் அவர்கள் கோபமடைந்துள்ளனர். பாட்டாளி வர்க்கத்தைப் பற்றித் தம்பட்டம் அடிக்கும் அவர்களால் குறைந்த பட்சம் பாடசாலை பிள்ளைகளுக்கு ஒரு வேளை சாப்பாடுகூட வழங்க முடியவில்லை. ஆனால் பஸ் வழங்குவதற்காக என்னை அவமதிப்பும், கேலியும் செய்கிறார்கள்.

இந்த அவமானங்களைப் பற்றி நான் கவலைப்படுவதில்லை. பஸ்மேன் அல்ல அதற்கு மேல் எவ்வாறான பெயர் சூட்டினாலும் பாடசாலை மாணவர்களுக்காக பேரூந்து அன்பளிப்புச் செய்வதை நிறுத்தமாட்டேன். பஸ் வண்டிகளுக்குத் தீ வைக்கவும், துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளவுமே அவர்களால் முடியும்.

வெறுமனே கேலி செய்யாமல், சேறுபூசமால் மக்களுக்கு சேவையாற்ற முடிந்தால் முன்வாருமாறு சோசலிஸவாதிகளுக்கு சவால் விடுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

# வெற்றிலை மென்றவருக்கு ஒழுக்காற்று நடவடிக்கை!

யாழ்ப்பாணம் தலைமை பொலிஸ் நிலையத்தில் வெற்றிலையை மென்று கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக பொறுப்பதிகாரியால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலைய பிரதான வாயிலில் கடமையில் ஈடுபட்டிருந்த மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர் வெற்றிலை மென்றவாறு கடமையில் இருந்ததுடன் பொலிஸ் நிலையத்துக்கு வருவோரிடமும் மரியாதைக் குறைவாகவும் நடந்து கொண்டுள்ளார்.

அது தொடர்பில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு தெரியப்படுத்தியதை அடுத்து, உடனடியாக அந்த உத்தியோகத்தரை கடமையில் இருந்து நீக்கி, அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு நிர்வாக உத்தியோகஸ்தருக்கு, பொறுப்பதிகாரி பணித்துள்ளார்.

# அஜித் நிவாட் கப்ராலுக்கு விதித்த பயணத்தடை நீடிப்பு!

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு விதிக்கப்பட்ட பயணத் தடை நீடிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் தென் மாகாண ஆளுநர் ரஜித் கீர்த்தி தென்னகோனால் சமர்ப்பிக்கப்பட்ட மனு நேற்று (செவ்வாய்க்கிழமை) கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெகுனாவல முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

இதன்போதே எதிர்வரும் பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி வரை இந்தத் தடை நீடிக்கப் பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக கடமையாற்றிய போது, அஜித் நிவாட் கப்ரால் பொது நிதியை துஷ்பிரயோகம் செய்தார் எனக் குற்றம் சுமத்தி இந்த தனிப்பட்ட மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அரச ஊழியர்களுக்கு இரண்டு கட்ட சம்பளம்!

பதவிநிலை அல்லாத அரச ஊழியர்களின் மாதாந்த சம்பளத்தை உரிய திகதியில் வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அத்துடன், பதவிநிலை அரச ஊழியர்களின் மாதாந்த சம்பளத்தை உரிய திகதிக்கு சில நாள்களுக்குப் பின்னர் வழங்குவதற்கு அமைச்சரவை இணக்கம் தெரிவித்துள்ளது.

திறைசேரியின் நடவடிக்கைகள் தொடர்பில் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்துக்கே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் புதிய வருவாய் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.இதன் மூலம் கிடைக்கும் வருவாய் வசூலிக்க சிறிது காலம் எடுக்கும் என்பதால், அரச ஊழியர் சம்பளம் வழங்குவது தொடர்பாக முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 2023 ஜனவரி முதல் அடுத்த சில மாதங்களுக்கு அரசு செலவினங்களை நிர்வகிப்பதற்கு அரசு ஊழியர்களின் சம்பளத்தை வழங்க அமைச்சர்கள் குழு முன்மொழிந்துள்ளது.



# மலையகத்தின் சைவத் தமிழர்களின் பண்பாட்டைக் காக்கவேண்டும்.

**மலையக மக்களுக்கு சேவை செய்யும் பொருட்டு கண்டி, கலகா எனும் இடத்தில் சிவபூமி அறக்கட்டளையினரால் சிவபூமி மலையக ஆச்சிரமம் இன்று (18-01-2023) திறந்து வைக்கப்படுகின்றது. இவ் ஆச்சிரமத்தில் அன்னதானம், அறநெறிப் பாடசாலை, சமய விழாக்கள் என்பன நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது. இங்கிலாந்தை மையமாகக் கொண்ட அபயம் அறக்கட்டளையினர் இவ் ஆச்சிரமத்தில் இலவச மருத்துவ சேவை, கல்விச்சேவை என்பனவற்றையும் ஆரம்பிக்கின்றனர். இவ்வரிய முயற்சியினை போற்றி வாழ்த்துகின்றோம்.**





ஆங்கிலேயர்களால் அழைத்துவரப்பட்ட மலையகத் தமிழர்கள் அனைவரும் சைவ சமயத்தவர்களே. அவர்களின் வாழ்வை காக்கவேண்டிய கடமை இலங்கை மக்கள் அனைவருக்கும் உரியதே. மலையகத்தில் மதமாற்றம் செய்பவர்களின் ஆரவாரம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. பல புதிய கிறிஸ்தவ சபைகள் மலையகத்தில் நிலங்களை கொள்வனவு செய்து தீவிர மதமாற்றப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். வறுமையின் கோரப்பிடியில் தொடர்ந்து அல்லலுறும் மலையக மக்களை அனைவரும் ஒன்றுபட்டு காக்க வேண்டும். எவ்வளவோ வாழ்க்கைப் போராட்டங்களுக்கு மத்தியில் மலையக மக்கள் கல்வியில் ஆர்வம் செலுத்தி வருகிறார்கள். பல மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல தொடங்கியுள்ளார்கள். எனினும் மலையக மக்களின் அடிப்படை பிரச்சினைகள் தீர்ந்தபாடாக இல்லை. அவர்களுக்கான வீட்டுத்திட்டம் சரியான முறையில் அமைக்கப்படவில்லை. அவர்களின் சம்பளப் பிரச்சினையும் இன்றைய சூழ்நிலைக்கு பொருத்தப்பாடாக தீர்த்துவைக்கப்படவில்லை. இவற்றைப் பயன்படுத்தி மதமாற்று சக்திகள் தீவிர செயற்பாட்டில் இறங்கியுள்ளனர். கிறிஸ்தவ சபைகள் முதல் இஸ்லாமிய அமைப்புக்களும் தங்கள் பக்கமாக மக்களை ஈர்ப்பதற்கு திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றனர்.

மலையக மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இலங்கைத் தமிழ் அரசியல் கட்சிகளின் முயற்சிகள் திருப்தியாக இல்லை. ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தத்தில் இலங்கையில் இருந்த பத்து இலட்சம் சைவத் தமிழர்களை இலங்கையிலேயே தங்க வைத்திருந்தால் எமது இனமும் எமது சமயமும் இன்று வலுப்பெற்றிருக்கும். எங்கள் தமிழ்த் தலைவர்கள் செய்த மாபெரும் தவறுகளால் நாம் இன்று துன்பத்தை அனுபவிக்கிறோம்.



மலையகத்தில் சைவ ஆலயங்களும் பாரம்பரிய கிராமிய வழிபாடுகளும் வளர்ச்சி பெறவேண்டும். அவர்களின் பாரம்பரிய கலைகளைப் பாதுகாப்பதற்கு சீரான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இந்து கலாசார திணைக்களம் மலையகத்தில் விசேடமாக தமது அலுவலகங்களை உருவாக்கி விரைந்து செயலாற்ற வேண்டும். மலையகத்தில் சைவ சமய விழிப்புணர்வு கூட்டங்கள், சைவ மகாநாடுகள் நடைபெற ஏற்பாடு செய்தல் வேண்டும். வடக்கு இராமநாதன் நுன்கலைப்பீடம், கிழக்கில் விபுலாநந்தர் பீடம் போல் மலையகத்திலும் பண்ணிசை கர்நாடக இசை போன்றவற்றை முறையாக கற்பதற்கு ஓர் பீடம் அமைத்தல் வேண்டும். இவ்விடயம் தொடர்பாக மலையக அரசியல் தலைவர்கள் ஏனைய தமிழ் அரசியல்வாதிகளும் நன்முறையில் சிந்தித்து செயலாற்ற வேண்டும். மலையகத்தில் நவீன தொழிற்சாலைகள், தொழில்நுட்ப கூடங்கள் உருவாக வேண்டும். புலம்பெயர் தமிழர்களும் மலையக தமிழர்களின் விருத்தியில் கணிசமான அளவு பங்கேற்க வேண்டும்.

-ரிஷி தொண்டுநாதன்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 242

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## கலாநிதியின் தொடர்ந்த அறிவுரைகள்



* ஐ.நாவின் பொது சபைக்கு தனது அறிவுரையாக 2014 இல் தந்த சமர்ப்பணத்தில், ஒருநீதியான உலக அமைப்பை ஏற்படுத்த, 25 கொள்கை அடிப்படைகளில், எல்லா இன மக்களும் பாகுபாடின்றி சுய நிர்ணய உரிமை, ஜனநாயகத்தின் பெயராலும் மோதல்களைத் தவிர்க்கும் யுக்தியாகவும் தரப்பட வேண்டும் எனக் கோரியிருந்தார். ஐ.நாவே மோதல்களும் முரண்பாடுகளும் இருக்கும் பகுதிகளில் வாக்கெடுப்பை ஏற்படுத்தி, அந்த மக்கள் எதனை விரும்புகிறார்கள் என கருத்துக்களைப் பெற வேண்டும் என வலியுறுத்தி இருந்தார். ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்ட பின் தீமோர், எத்தியோப்பியா, எரித்திரியா, சூடான் போன்ற பகுதிகளில் இவை நடைபெற்றாலும், கோடிக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டிருந்தாலும் ஐ.நா. அவர்களை கைவிட்டுள்ளது. நேர காலத்தில் தேவையான பேச்சு வார்த்தைகளை எடுத்திருந்தால் பலவகை அழிவுகளை ஏற்படுத்தாமல் பிரிந்து போக வழி ஏற்பட்டிருக்கும்.

* சுயநிர்ணய உரிமை என்பது இயற்கையான சட்டம். அது சுதந்திரத்துக்காகத் தன்னுணர்வில் எழுவது. ஒன்றாக கூடி இருப்பதற்கான தனித்துவத்தையும் அடையாளத்தையும் தேடுவது. அது முரண்பாடுகளை உண்டாக்குவதிலும் பார்க்க முரண்பாடுகளைக் களைவதற்கு பயன்படுகிறது. தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைகளை கொடூரமாக ஸ்ரீலங்கா அடக்கி ஒடுக்க முற்பட்டமை 30 வருடங்களான சுதந்திரப் போராட்டத்திற்கும் 2 லட்சத்துக்கும் மேலான மரணங்களுக்கும் காலாக இருந்துள்ளது. அது மட்டுமல்ல, எவ்வளவு பேர் காணாமல் ஆக்கப்பட்டமைக்கும், பெருந்தொகையான தனியாரது ஆவணங்களும், சொத்துகளும், மனித குலத்தின் மாண்பு மிகுந்த கலாச்சார விழுமியங்களும் அழிக்கப்படுவதற்கு காரணமும் ஆகியது.

* இவ்வளவையும் நடத்தியவாறு ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழ் மக்களை பயங்கரவாதிகளாகவும், அவர்களது சுய நிர்ணய உரிமைகளை மதிக்கப் போவதில்லை எனவும், அவர்களுக்கு எதிரான வெறுப்புணர்வுகளை தங்களது நாட்டிற்கு மாத்திரமல்ல, சர்வதேச ஊடகங்களிலும், ஐ.நாவின் கட்டமைப்புகளுக்கு உள்ளேயும் பிரசாரப்படுத்தி வந்தது. ஆகவே இப்படியான பொய்ப் பிரச்சாரங்களை எதிர்த்து நிற்பது ஒவ்வொருவரதும் கடமையும் ஆகும்.

* பிரித்தானியா இலங்கையிலிருந்து தான் வெளியேறிய போது தங்களது ஆட்சி நலனுக்காக அதனை ஒரு நாடாக ஒற்றை ஆட்சியில் விட்டு சென்ற முறையற்றதும் குறைபாடுகள் கொண்டதுமான காலனித்துவ நீக்கம்தான் இவற்றின் அடிப்படைக் காரணங்கள்.

* இவற்றால் மாண்டு போனவர்களை நாங்கள் மீட்டு வர முடியாது. ஆனால் தற்சமயம் உயிர்வாழ்பவர்களும் அவர்களது சந்ததிகளும் நடக்கின்ற அநீதிகளை மாற்றிக்கொள்ள சர்வதேச நீதிகள் உதவிகள் தர வேண்டும்.

* காலத்துக்கு காலம் ஐ.நாவின் மனித உரிமைகள் சபை ஸ்ரீலங்காவுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றியதை போல் செப்டம்பர் 2022 இலும் நிறைவேற்றி இருந்தது. அதில் பயங்கரவாதத் தடைச் சட்டங்களை பாவிப்பது, மனித உரிமைகள் மீறப்படுவது பற்றிக் குறிப்பிட்டு, பொறுப்பு கூறலுக்கும் இணக்கங்கள் ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகளில் ஒரு தனியான ஒழுங்கு முறையில் நீதிமன்றம் ஒன்றை அமைக்க வேண்டும் என்று கோரியிருந்தது. இவற்றை நடைமுறைப்படுத்த ஐ.நா. மனித உரிமை மன்று முயற்சிகள் எடுப்பதற்கு அழுத்தங்கள் தர வேண்டும் என கலாநிதி சாயஸ் கூறுகிறார்.

ஆனால் தாங்கள் அந்தத் தீர்மானங்களை ஏற்றுக் கொள்ளவில்லை என ஸ்ரீலங்கா அரசு அறிவித்ததையும், நல்லாட்சி காலத்தைத் தவிர மற்ற நாள்களில் இப்படியான தீர்மானங்கள் தூக்கி வீசப்பட்டு, கோட்டாபய அரசு பதவி ஏற்றதும் ஐ.நா. மனித உரிமைகள் மன்றத்துடன் முட்டி மோதுவதான கொள்கையே வகுக்கப்பட்டது. ஆக ஸ்ரீலங்கா இவற்றை நடை முறைப்படுத்துவது சர்வதேச நெருக் கடியால் மட்டும் உருவாகலாம்.

* அரசு சார்பற்ற மனித உரிமை அமைப்புகள் மேலும் மக்களின் நிரந்தர தீர்ப்பாயம் (Permanent Peoples' Tribunal) 2014 இல் தந்த தீர்ப்பில், தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்டது இனப்படுகொலை என அறிவிப்பு தந்த வகையில், இவற்றுக்கும் அழுத்தம் தர வேண்டும் என அறிவுரைகள் தருகிறார். முக்கியமாக ஸ்ரீலங்காவினது தற்போதைய நிலை பிரித்தானியா அதனைக் காலனித்துவத்திற்குப் பிறகு விட்டுச் சென்றதால் உருவானது என்ற அடிப்படையில் எப்படி சாக்கோஸ் தீவு, மொரிசியஸ் தீவுக்கு எதிராக சுயநிர்ணய உரிமையில் போராடி சர்வதேச நீதிமன்றத்தில் (International Court of Justice) ஐ.நா. அமைப்பின் 96 ஆம் சரத்தின் கீழ் ஓர் அறிவுரைக் கருத்தைப் பெற்றிருக்கிறதோ, அது போன்ற ஒன்றினை தமிழ் மக்களும் பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும் எனவும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் (International Criminal Court) சரத்துகளின் கீழ் இவற்றை நடத்திய அரசியல்வாதிகளையும் இராணுவத்தையும் தண்டனை நடவடிக்கைகளுக்கு ஆட்படுத்தும் முயற்சிகள் தேவை என்கிறார். இவை போலவே ஐ.நா., சர்வதேச நீதிமன்றத்தின் (ICJ) இஸ்ரேல், பலஸ்தீனியப் பிரதேசங்களை சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பது பற்றி அறிவுரைக் கருத்துப் பெற வேண்டும் என கோரிக்கையின் மீது 87நாடுகள் ஆதரித்தும், 26 நாடுகள் எதிர்த்தும், 53 நாடுகள் நடுநிலையாக யார் பக்கமும் வாக்களிக்காது இருந்தார்கள். அமெரிக்கா, இஸ்வேலுக்காகத் தீர்மானத்தை எதிர்த்தது. இந்தியா வாக்களிக்காது நடுநிலை வகித்தது. சீனா,ரஷ்யா ஆதரவாக வாக்களித்தன. வாக்களிப்பு பட்டியலை ஆராய்ந்தால் புவியியல் அரசியலின் கைவண்ணத்தை காணலாம்.

### பிரசாரங்களும் விளைவுகளும்

இவரது கருத்துக்களும் ஆலோசனைகளும் எதனை முக்கியமாக கூறுகின்றன என்பதை தமிழ் மக்கள் துல்லியமாக புரிந்து, யதார்த்தமாக முன்னேறுவதற்கான பாதைகளைத் தெளிவாக்க வேண்டும். நடத்தப்பட்டவை இனப்பிரச்சினைதான் என்ற சமர்ப்பணங்களும் அரசு சார்பற்ற அமைப்புகளின் கருத்துக்களும் ஐ.நாவின் முன் உண்டு. அவற்றிற்கு எதிரான சமர்ப்பணங்கள் சர்வதேச சட்டத்தரணிகளால் வரையப்பட்டவற்றை ஸ்ரீலங்கா அரசும் எதிர்வாதங்களாக சமர்ப்பித்து உள்ளதால், 50 வருடங்களில் ஐ.நாவில் பணியாற்றிய கலாநிதியின் பார்வையில் அங்கு தமிழர்களைப் பொறுத்தவரை சர்வதேச அரசியலால் பச்சாதாபமாகப் பார்க்கப்படவில்லை. அப்படியானால் இனப்படுகொலை என்ற ஈடுசெய்நீதி ஐ.நாவில் இன்னும் அரிச்சுவடி நிலையில்தான் நிற்கிறது. வளரும் பயிரை முளையிலே தெரியும் என்பது போல அது வளர்ந்து பயன் தருமா என்பது கலாநிதி கூறும் மற்றைய காரணங்களால் கேள்விக்குறியாகவே இருக்கிறது.

நியாய அடிப்படை என்பது வேறு. சட்டம், நீதி என்பன வேறு. ஐநாவின் முன் ஸ்ரீலங்கா சட்டத்தினதும் நீதியினதும் விவாதங்களை முன்னிலைப்படுத்துகிறது. நியாயத்தையோ தர்மத்தைப் பற்றியோ அந்தப் பேராண்மை கவலை கொள்ளவில்லை.

அதேசமயம் சர்வதேச அரசியலையும் ஆதரவுக்கு தேடிக் கொண்டுள்ளது தமிழ் மக்களால் இவற்றை அதாவது தங்களது வாதங்களை மாற்றி அமைப்பது கூட அவரது பிரச்சாரங்களால் சர்ச்சைக்கு உள்ளாகிறது.

ஏனெனில் அப்பொழுது போர்வலயத்துக்குள் அகப்பட்ட மக்கள் இராணுவத் தாக்குதல்களுக்குப் பயந்து விடுதலைப் புலிகளின் பாதுகாப்பை தேடி ஓடினார்கள். அப்படப் பாதுகாப்பு தேடியவர்கள் கொல்லப்பட்டார்கள் என்பதற்கு 'ஒருமித்த செயற்பாடு' என்பதும், போர் சட்ட ரீதியாக பயங்கரவாதிகளை ஒழிப்பதற்காக என்ற வாதங்களும் எழுகின்றன.

இனப்படுகொலை நடந்தது, அதனை தமிழ் மக்கள் அறிகிறார்கள், உணர்கிறார்கள். ஆனால் அது நடந்தது, நடக்கவில்லை என்ற நிரூபணத்தைத் தள்ளி வைத்து, ய்ச்தார்த்தமாகவும் சாதுரியமாகவும் தமிழ் மக்கள் போர்க் குற்றங்கள், மனிதாபிமானத்துக்கு எதிரான செயற்பாடுகள் என்பவற்றில் முன்னேற வேண்டும் என முன்னைய பதிவுகளில் வலியுறுத்தினேன். ஆனால், அரசியல் தேவைகள், ஐ.நாவில் தானே உள்ள போக முடியாது நிற்கும் சுண்டிலி விளக்குமாற்றையும் தூக்கிக் கொண்டு போக செய்யும் முயற்சிகளாக நடைபெறுகின்றன.

தமிழ் மக்கள் ஸ்ரீலங்காவின் பேராண்மையிடமிருந்து எவ்வளவு பேச்சு வார்த்தைகளிலும்எந்தவிதமானதீர்வுகளையும் பெற்றுக் கொள்ளப் போவதில்லை. இது அவர்களின் தொடர்ந்த முயற்சிகளால் ஐ.நாவில் சர்வதேசங்களில் இருந்துதான் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். தங்களது சர்வதேச அரசியலை சரியாக நடத்தும் இன குழுமங்கள் ஐ.நாவில் சாதுரியமான விளைவுகளை பெற்றுக்கொண்டு முன்னேறுவதைக் காணலாம் என்று கலாநிதி வைத்த கருத்தையும் ஆழமாகக் கவனிக்க வேண்டும். அப்படியானால் சர்வதேசத்திலோ, ஐ.நாவின் முன்னோ சரியான அரசியலை (Politically Correct) தமிழ் மக்கள் தெரிந்து கொள்ளவில்லை, நடத்தவில்லை என்பதைத்தான் சுட்டிக் காட்டுகிறார்.

போர் நடந்து கொண்டிருந்த கடைசி காலங்களில், போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றை வலியுறுத்தவும், அதன் மூலம் பொதுமக்களின் அழிவைத் தடுக்கவும், ஐ.நா. பொதுச் சபையை கூட்டுவதற்காக கேட்கும் தீர்மானம் ஒன்று பாதுகாப்பு சபையால் முன்னெடுக்கப்பட்ட போதும், அது ஆதரவின்றி முடக்கப்பட்டது. பாதுகாப்புச் சபையில் தடுப்பதிகாரம் கொண்ட சீனாவும் ரஷ்யாவும் முதலிலேயே தடுப்பதிகாரத்தை பாவித்து நிறுத்தினாலும், திரும்ப விரிவான பாதுகாப்புச் சபையின் ஆதரவுக் குழு நாட்டு நாடுகளுக்கு இடையில் பிரதிக்கப்பட்ட போதும் அங்கும் ஆதரவை பெறவில்லை. ஆகவே அவர்கள் நடத்திக் கொண்டிருக்கின்ற அரசியலை மீளாய்வு செய்ய வேண்டிய நிலைக்கு நிர்பந்திக்கப்பட்டுள்ளார்கள். இவற்றை மேலும் பார்க்கலாம்.

(வளரும்...)

## தமிழர் தாயகப் ....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

அச்சுறுத்தியும், அவர்களின் ஜனநாயக உரிமைகளை மறுதலித்தும் ஒடுக்கு முறைகளை பிரயோகித்தே வருகின்றனர். தைப்பொங்கல் தினத்தன்று பொதுமக்கள் மீது நேரடியாகவே தாக்குதலினை மேற்கொண்டுள்ளனர். இந்த சம்பவமானது எமது நீண்டகால கோரிக்கைகளான,

1. சிறிலங்காவின் ஆயுத படையினரை தமிழர் தாயகத்தில் இருந்து வெளியேற்ற வேண்டும்.

2. தமிழ்த் தேசிய இனப்பிரச்சனைக்கான எந்தவொரு நிரந்தர அரசியல் தீர்வுக்கும், சர்வதேசத்தினால் நடாத்தப்பட்டு கண்காணிக்கப்படும் பொதுவாக்கெடுப்பின் மூலம் தமிழ் மக்களின் ஆணையைப் பெற வேண்டும். இதில் சர்வதேசத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இனப்பிரச்சினைக்கான தீர்வுகள் தெரிவுகளாக உள்ளடக்கப்பட வேண்டும்.

எனும் கோரிக்கைகளினை மீண்டும் வலுப்படுத்தியுள்ளது.

சிங்கள பேரினவாதம் தொடர்ச்சியாகவே வெளிப்படுத்தும் அதன் கோர முகத்தினையும், குறிப்பாக ரணில் எனும் சிங்கள பேரினவாதியின் உண்மை முகத்தினை சர்வதேசம் புரிந்து கொள்வதுடன், இவ் வடக்குமுறையினை வன்மையாகக் கண்டிப்பதுடன் மீள நிகழாமையை உறுதி செய்யவேண்டும்.

தொடர்ச்சியாகவே கிழக்கைப் புறந்தள்ளி வடக்கில் மட்டுமே தமிழ் மக்களுக்கு பிரச்சனைகள் உள்ளன என எமது பாரம்பரிய தாயகமான வடகிழக்கைத் துண்டாடுவதிலும், தமிழ் தேசியத்தைச் சிதைப்பதிலும் மும்முரமாகச் செயற்படும் சிறிலங்காவின் ஜனாதிபதி ரணிலின் ராஜதந்திரத்தினை முறியடித்து, எமது தாயக நிலத்தைப் பாதுகாக்க தமிழ்த்தேசியத்தின்பால் பயணிக்கும் அனைவரும் ஓரணியில் அணிதிரளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் – என்றுள்ளது.

இந்த அறிக்கையில் யாழ்ப்பாணம் நல்லை ஆதீன குரு, திருகோணமலை ஆயர், திருகோணமலை தென்கயிலை ஆதீன குரு, யாழ். மறை மாவட்ட குரு முதல்வர், யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீன குருமுதல்வர், மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கத்தோலிக்க மதகுருக்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளன் சங்கத் தலைவர், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் தலைவர், யாழ்ப்பாண மாணவர் ஒன்றியத் தலைவர், கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீட மாணவர் ஒன்றிய தலைவர் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

## உண்மை மற்றும் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீறல்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் கொழும்பு அரசு கடும் பன்னாட்டு அழுத்தங்களுக்கு உள்ளாகி வருகின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையிலும் இந்த விவகாரம் தொடர்ச்சியாக எடுக்கப்பட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் பொங்கல் விழாவிற்காக வந்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இத்தகைய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்குவது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவித்திருந்தார்.

இதைத் தொடர்ந்து கொழும்பில் நேற்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த ஆணைக்குழு தொடர்பான முன்மொழிவு ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள் அறுவரால் முன்வைக்கப்பட்டதாக அரசின் செய்திக் குறிப்பு தெரிவித்தது.

“உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறை என்கிற கருத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்” என்ற தலைப்பில் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் டினேஸ் குணவர்த்தன, மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த, நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச, நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் இணைந்து அமைச்சரவைப் பத்திரத்தை முன்வைத்தனர்.

“30 வருடங்களாக நீடித்து வந்த மோதல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வதற்கும், அதனைப் பாதுகாப்பதற்கும் அர்த்தமுள்ள வழியாக உண்மையைத் தேடுவதற்கும் ஒரு சுயாதீனமான உள்ளூர் பொறிமுறையின் தேவை தெளிவாகத் தெரிகிறது. மோதல்களுக்குப் பின்னர் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக இலங்கை பல சுயாதீன விசாரணைக் குழுக்களை நிறுவியுள்ளது. அந்த ஆணைக்குழுக்களின் அனைத்து பரிந்துரைகளையும் நிறைவேற்றுவது இன்றியமையாதது என்று அரசின் அறிக்கை கூறியது.

## தேர்தல் நடந்தால் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் தொடர்பில் கட்சியின் முக்கியஸ்தர்களுடன் நேற்று நடத்திய கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

உள்ளூராட்சி சபைத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என எந்தத் தேர்தல் நடந்தாலும் அதனை எதிர்கொள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தயாராகவுள்ளது.

எந்தத் தேர்தல் நடந்தாலும் எமது கட்சியே வெற்றியடையும். அந்த நம்பிக்கையுடன் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை நீங்கள் முன்னெடுக்கவேண்டும்.

தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஒருபோதும் தோற்ற கட்சி அல்ல. அதை எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் நாம் நிரூபித்துக் காட்டவேண்டும்.

எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களுக்குச் செவிசாய்க்காமல் மக்கள் மத்தியில் பிரசாரங்களை முன்னெடுக்கவேண்டும். மக்களுக்கு உண்மை நிலைமையை நாம் தெளிவுபடுத்த வேண்டும் – என்றார்.

## தமிழ் அரசுக் கட்சியின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் கூட்டத்தைக் கூட்டித் தீர்மானிக்க முடிவு செய்யப்பட்டது.

நகர முதல்வர் பதவிக்குப் போட்டியிட மூத்த உறுப்பினரான சொலமன் சிறிலும் முன்னாள் மேயரான ஆர்னோல்ட்டும் விரும்புவதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

யாழ். மாநகர முதல்வராக இருந்த வி.மணிவண்ணன் பதவி விலகியதைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கான புதிய முதல்வர் தெரிவு நாளை வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதற்கான தமது வேட்பாளரைத் தெரிவு செய்வதற்காகவே தமிழரசுக் கட்சியின் மாநகர சபை உறுப்பினர்கள் கட்சித் தலைவர்களுடன் நேற்றுக் கூடி ஆலோசனை நடத்தினர். யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் அமைந்துள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமை செயலகத்தில் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கட்சியின் மூத்த உப தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஆகியோரும் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

## லஞ்சம் வாங்கிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லஞ்சம் பெற்றார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. லஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அதிகாரிகளினால் அவர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

10 லட்சம் ரூபா பணத்தை அவர் லஞ்சமாகப் பெற்றார் என்றும் அதில் 7 லட்சம் ரூபாவை ஏற்கனவே பெற்றிருந்த நிலையில் மிகுதி 3 லட்சம் ரூபாவை நேற்றுப் பெறுவதற்குச் சென்றபோது அதிகாரிகளால் அவர் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டார் என்றும் பொலிஸ் தரப்பு தகவல்கள் கூறுகின்றன. எனினும் குரல் தரவல்ல அதிகாரிகள் எவரும் லஞ்சத் தொகை தொடர்பில் உறுதியான தகவல்களைத் தெரிவிக்கவில்லை.

கைதுசெய்யப்பட்டவர் சண்டிலிப்பாயில் வசித்து வருபவர். நேற்றைய தினம் கடமை முடிந்து வழக்கத்தைவிட நேரத்துடன் அவர் வீட்டிற்குப் புறப்பட்டுச் சென்ற பின்னர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வைத்து அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட பின்னர் கொழும்புக்கு அழைத்துச்செல்லப்படுவார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## வசந்த முதலிகேக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை பதவியிலிருந்து விரட்டியடித்த மக்கள் எழுச்சியில் முக்கிய பங்காற்றிய செயற்பாட்டாளர் வசந்த முதலிகே. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அவர், 90 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

## கடன் மறுசீரமைப்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றியளித்துள்ளன என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று அறிவித்தார்.

“பேச்சுக்கள் வெற்றியடைந்திருக்கின்றன என்பதை இந்தச் சபைக்குத் தெரியப்படுத்துகின்றேன்” என்றார் ஜனாதிபதி.

மிக விரைவில் பதில் கிடைக்கப்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கை பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டதைத் தொடர்ந்து கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையை அடைந்திருப்பதாக அறிவித்தது. இது மேலும் நெருக்கடியை ஏற்படுத்தியது. பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான கடன்களைப் பெறுவது மேலும் சிக்கலாகியது.

இதனால் பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து கடன்களைப் பெறுவதற்கு அரசு முயற்சித்து வருகின்றது. இது தொடர்பாக அதிகாரிகள் மட்டத்தில் நடத்தப்பட்ட பேச்சுக்கள் இணக்கத்தை எட்டியிருந்தாலும், இலங்கை ஏற்கனவே இந்தியா மற்றும் சீனாவிடம் பெற்றிருக்கும் கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கான கால எல்லைகள், விதிகள் குறித்து மறுசீரமைப்பு இன்றி நாணய நிதியம் கடன் வழங்குவதற்குத் தயாராக இல்லை.

நாணய நிதியத்தின் கடன் தாமதமாவதற்கு இந்த கடன் மறுசீரமைப்பு பெரும் முட்டுக்கட்டையாக இருந்து வந்தது. இந்த நிலையிலேயே இந்தியா, சீனா ஆகிய இரு நாடுகளுடனும் கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் நடத்தப்பட்ட பேச்சுக்கள் வெற்றியடைந்திருப்பதாக ஜனாதிபதி அறிவித்திருக்கிறார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622

காலைக்கதிர் Kalaikkathir

‘காலைக்கதிர்’ பத்திரிகையில் கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. உதவி ஆசிரியர்
2. பக்க ஒப்புநோக்குநர்
3. பக்கவடிவமைப்பாளர்
4. செய்தியாளர்கள்
5. இத்துறைகளில் பயிற்சி பெற விரும்புவோர்களும் தொடர்புகொள்ளலாம்.

தொடர்புகளுக்கு -077 307 8799

காலைக்கதிர் Kalaikkathir

# கம்பஹாவில் அனைத்து மருந்தகங்களையும் ஒழுங்குபடுத்த அமைச்சர் பிரசன்ன உத்தரவு



கம்பஹாமாவட்டத்தில்உள்ளஅனைத்து மருந்தகங்களையும் ஒழுங்குபடுத்த அவசரத் திட்டம் ஒன்றை தயாரிக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மினுவாங்கொடை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவில் உள்ள அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

போதைக்கு அடிமையானவர்கள் மருத்துவரின் பரிந்துரை இல்லாமல் சில மருந்தகங்களில் இருந்து பல வகையான மருந்துகளை வாங்குகின்றனர் என வைத்திய அதிகாரியும் பொலிஸாரும் தெரிவித்தமைக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் போதைக்கு அடிமையானவர்களை மீட்பதற்கான திட்டங்கள் ஏற்கனவே நடைமுறையில் உள்ளன எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

மினுவாங்கொடை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு மேலும் கூறியவை வருமாறு –

போதைப்பொருளில்இருந்துபாடசாலை மாணவர்களைக் காப்பாற்ற கம்பஹா மாவட்டத்தில் விசேட திட்டம் ஒன்று செயற்படுத்தப்படுகிறது. பொலிஸ், மருத்துவ அலுவலகங்கள், பாடசாலை பிரதேச செயலகம், சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி அமைப்புகள் ஒன்றிணைந்து ஒரு குழுவை நிறுவி பாடசாலைகளுடன் இணைத்துக் கொள்ளுங்கள். பாடசாலைகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். பின்னர் போதைப்பொருள் சம்பந்தப்பட்ட குழந்தைகளையும் பெற்றோரையும் அடையாளம் காண்பது சுலபம். அதுபோல சம்பந்தப்பட்ட நிறுவனங்களைத் தொடர்பு கொண்டு அனைத்து மாவட்டத்திலுள்ள அனைத்து மருந்தகங்களையும் ஒழுங்குபடுத்தும் திட்டத்தை செயற்படுத்தவும்.

பாடசாலைக்குச் செல்லாத குழந்தைகளை மீண்டும் பாடசாலைக்கு அனுப்பும் திட்டத்தையும் செயல்படுத்த வேண்டும். ஒரு கிராமத்தில் எட்டு அரச அதிகாரிகள் உள்ளனர். அந்தக் கிராமங்களில் பாடசாலைக்குச் செல்லாத குழந்தைகளைத் தேடிக் கண்டுபிடிங்கள். அது போல பதிவு செய்தும் பள்ளிக்கு செல்லாத குழந்தைகள் தொடர்பாகப் பள்ளிகளில் இருந்து அறிக்கை எடுத்துக்கொள்ளுங்கள். குழந்தைகள் பாடசாலைக்குச் செல்லாமல் இருக்கின்றமை வறுமையின் காரணமா? அல்லது பெற்றோரின் கவனக்குறைவாலா? என்றும் அப்படி இல்லாவிட்டால் பெற்றோர் போதைப்பொருளுக்கு அடிமையானவரா? என்பதைக் கண்டறியுங்கள்.

வறுமை காரணமாகக் குழந்தைகள் பாடசாலைக்குச் செல்லவில்லை என்றால், அதற்கு எங்களால் தலையிட முடியும். வசதி வாய்ப்புள்ள குடும்பங்களின் பிள்ளைகள் பாடசாலைக்கு போகவில்லை என்றால் அதற்குரிய மருத்துவ ஆலோசனைகளை வழங்க முடியும். குழந்தைகள்



எழுதப் படிக்கத் தெரியாததால் அவர்கள் பாடசாலைக்குச் செல்லவில்லை என்றால், அத்தகைய குழந்தைகளுக்கு சிறப்பு வகுப்புகள் நடத்த முடியும். இதற்கு வலயக் கல்விப் பணிப்பாளருக்கு நிறைய வேலை செய்ய முடியும். அதனால் பாடசாலைக்கு செல்லாத குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்ப அனைவரும் ஒன்று சேர்ந்து முழு விவரங்களுடன் ஓர் அட்டவணையை உருவாக்கி, பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்வோம். இல்லையெனில், தனியாக வேலை செய்வது கடினம்.

மேலும், தற்போது புதிய சமுர்த்தி பயனாளிகள் அடையாளம் காணப்படுகின்றனர். இது கிராமிய பொருளாதாரக் குழுக்கள் மூலம் செய்யப்படுகிறது. அந்த பணி ஒழுங்குபடுத்தலில் அரசியல் அதிகாரிகளின் தலையீடு இல்லை. ஆனால் மக்களின் கோரிக்கைகள் பொதுமக்கள் முகவர்களான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அனுப்பப்படுகிறது. முன்னுரிமைப் பதிவேடு மூலம் புதிய பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கவும். நீங்கள் கிராமத்தில் இருக்கும்போது, சமுர்த்தி தேவைப்படும் குடும்பங்களை அடையாளம் காணலாம். புதிதாக பயனாளிகளை அடையாளம் காண்பதில் அரசியல் அதிகாரத்தின் தலையீடு இல்லை. ஆனால் அரசியல்வாதிகளாகிய நாங்கள் மக்கள் பக்கம் அமர்ந்து பணியாற்றுகிறோம். புதிய பயனாளிகள் தேர்வு தொடர்பாக யார் கேள்வி கேட்டாலும் அதிகாரிகளுக்கு பதில் சொல்ல முடியுமாக இருக்க வேண்டும். கிராமக் குழுக்களுக்கு மக்கள் பிரதிநிதிகள் செல்ல வேண்டும். மக்களுக்கு கொடுக்கப்பட்ட பொருள்களுக்கு பொது முகவர்கள் தலையிடத் தேவையில்லை. மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள் பொதுமக்களின் பக்கம் இருக்க வேண்டும். அதிகாரிகள் தவறாக தேர்ந்தெடுத்தால் அதைப் பற்றி பேசுங்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர், கம்பஹா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவர் சஹான் பிரதீப், கம்பஹா மாவட்ட செயலாளர் சுமன்தர்ஷனி பாடிகோறால, மினுவாங்கொடை பிரதேச சபையின் தலைவர் குமார அரங்கல்ல, மினுவாங்கொடை மேயர் நீல் ஜயசேகர, மினுவாங்கொடை பிரதேச செயலாளர் யு.டபிள்யூ.டி.யு. ராஜகருணா உட்பட இந்நிகழ்வில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

## மசாஜ் நிலையங்கள் தொடர்பாக பரவும் செய்திகள் உண்மையில்லை

### சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



மசாஜ் நிலையங்களில் ஆண்களுக்கு ஆண்களும், பெண்களுக்கு பெண்களும் மட்டுமே மசாஜ் நடவடிக்கையில் ஈடுபட முடியும் என்ற வகையில் சட்டம் கொண்டுவரப்படவுள்ளதாக வெளிவரும் செய்திகளில் உண்மையில்லையென சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜெயக்கொடி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

ஆண்களுக்கு ஆண்களும், பெண்களுக்கு பெண்களும் மட்டுமே மசாஜ் கடமைகளில் ஈடுபட முடியும் என்ற வகையில் சட்டம் கொண்டுவரப்படவுள்ளது.

இதற்காக பல்வேறு வழிகளில் சட்டம் இயற்றப்படும் என ஆயுர்வேத ஆணையாளர் நாயகம் தம்மிக்க அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

மசாஜ் நிலையங்கள் மூலம் எய்ட்ஸ் உள்ளிட்ட பாலியல் ரீதியான நோய்கள் பரவலாக பரவி வருவதால் இந்த சட்டம் இயற்றப்படுவதாக ஆணையாளர் கூறுகிறார் என்ற வகையில் ஊடகங்களில் செய்திகள் வெளிவந்துள்ளன. இந்த செய்தியில் எந்தவித உண்மை யும் கிடையாது. அவ்வாறு எந்த சட்டமும் கொண்டு வரப்படவில்லை. அதுமட்டுமன்றி ஆயுர்வேத ஆணையாளர் நாயகம் என்று எவருமே இல்லை. சுற்றுலா பயணிகளை குழப்பும் வகையில் இவ்வாறான செய்திகள் திட்டமிட்டு வெளியிடப்படுகின்றன. – என்றார்.

## ஜப்பான் யென்களைத் திருடிய கணவனும் மனைவியும் கைது!

அக்குறணைப் பிரதேசத்தில் வைத்து, வாகனம் ஒன்றினுள் இருந்த 5 லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதி கொண்ட ஜப்பான் யென்களைத் திருடிய குற்றத்துக்காக கணவனும், மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளனர். இது பற்றி மேலும் தெரிய வருவதாவது –

அக்குறணை 7 ஆம் மைல் பிரதேசத்தில் நடந்த இந்தச் சம்பவத்தில் ஒருவர் வாகனம் ஒன்றை செலுத்தி வந்துள்ளார். அவரது மகன் வெளிநாட்டில் தொழில் புரிந்துநாடுதிரும்பியவர். அவரது பணப்பை ஒன்று வாகனத்தில் காணப்பட்டுள்ளது.

வாகனத்தைச் செலுத்தியவர் தனது நண்பர் ஒருவரைக் கண்டு வாகனத்தை நிறுத்தி கதைத்துக் கொண்டிருந்துள்ளார்.

அவ்வேளை வாகனம் கொள்வனவு செய்யும் ஒருவர் அந்த வாகனத்தை பரிசோதனை செய்துள்ளார். அப்போது அங்குள்ள பணப்பையை கண்டு அதனைத் தந்திரமான முறையில் திருடியுள்ளார்.

பணத்தைப் பறி கொடுத்தவர் சி.சி.ரி.வியின் உதவியுடன் சோதனை மேற்கொண்ட போது திருடியவர் இனம் காணப்பட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். பின்னர் மேற்கொண்ட விசாரணைகள் மூலம் திருடப்பட்ட பணத்தில் ஒரு பகுதியை 125,000 ரூபாவுக்கு இலங்கைப் பணமாக மாற்றி அதில் 120,000 ரூபாயை தனது மனைவியிடம் கொடுத்துள்ளார்.

மேலும் மேற்கொண்ட சோதனையின் போது திருடப்பட்ட பணத்தின் மற்றும் ஒரு பகுதியும் வீட்டில் வைத்துக் கைப்பற்றப்பட்டுள்ளது. பணத்தை திருடிய குற்றத்துக்காகக் கணவனும், திருட்டுப் பொருளை உடன் வைத்திருந்த குற்றத்துக்காக மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளனர். அளவத்துகொடைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## அரசமைப்பில் திருத்தம் கொண்டுவருவதால் இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு ஏற்படாது!

### கொழும்பு பல்கலை சட்டபீட பேராசிரியர் சர்வேஸ்வரன் தெரிவிப்பு



உடனடியாக அரசமைப்பில் திருத்தம்கொண்டுவந்து, இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு ஒன்று வரப்போவதில்லை என கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட பேராசிரியர் அ.சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர் –

இனப்பிரச்சினைக்கான தீர்வாகத் தமிழ் மக்கள் பெரும்பாலும் ஏற்றுக்கொள்கின்ற சமஷ்டி முறையிலான தீர்வு அல்லது அதைப் போன்ற முறையில் எதிர்பார்க்கப்படுகின்ற ஒரு தீர்வாகும்.

ஆனால், இன்றுள்ள வினா என்னவென்றால், தற்போதைய அரசாங்கத்தின் அல்லது ஜனாதிபதியின் எஞ்சிய ஆட்சிக் காலத்துக்குள், இனப்பிரச்சினைக்கு இறுதியான தீர்வாக அமையக்கூடிய சமஷ்டி முறையிலான தீர்வு என்பது எந்தளவு சாத்தியமாகும் என்பதாகும். அது மாத்திரமல்லாது, இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடும் முக்கியமாகும். அதாவது தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் 13 ஆம் திருத்தத்துக்கு அப்பால் சென்று, தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்கின்ற தீர்வொன்றை வழங்குகின்ற விதத்தில் இந்தியா எந்தளவு அழுத்தங்களைப் பிரயோகிக்கும் என்பது கூட சந்தேகத்துக்கிடமான ஒன்றாகும்.

ஏனெனில், 13 ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இந்தியா தெரிவிக்கின்றதே தவிர, அதற்கு அப்பால் செல்வது தொடர்பில் எதுவும் தெரிவிக்கவில்லை.

இவ்வாறான நிலையில் 13 ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் தெரிவித்திருக்கும் கருத்து என்பது தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் முக்கியமான விடயமாகும்.

ஜனாதிபதியின் இந்தக் கூற்றைத் தமிழ் மக்கள் எவ்வாறு பார்க்கின்றார்கள் என்பது முக்கியமாகும். என்னைப் பொறுத்தவரை, தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு தீர்வானது ஒரு படிமுறையிலே இருக்க முடியும். ஏனெனில், உடனடியாக அரசமைப் பில் திருத்தம் கொண்டுவந்து, இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு ஒன்று வரப் போவதில்லை.

அதனால் இந்தச் சந்தர்ப்பத்தில் 'வைத்தால் குடுமி எடுத்தால் மொட்டை' என்ற நிலையில் தமிழ் மக்கள் இருக்க முடியாது.

அதனால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தின் முதலாவது படிநிலையாக, 13 ஆம் திருத்தத்தின் அதிகாரப் பரவலாக்கத்தை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளார்கள். அவ்வாறு இல்லாவிட்டால் மாகாண சபை முறைமையும் இல்லாமல் செல்லும் நிலை தொடர்ந்து சென்றுகொண்டிருக்கும்.

அத்துடன் 13 ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக ஜனாதிபதி தெரிவிக்கின்றபோதும் அதில் இருக்கும் அனைத்து விடயங்களையும் முழுமையாக நடைமுறைப்படுத்துவாரா என்ற கேள்வியும் எழுகின்றது. – எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.01.2023இல் வெளியிடப்பெற்றது.